தேனீ இணையத்தளம்
www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de
Online Newspaper in Tamil Vol.10 08.04.2012

முதற்பக்கம் | ஆனந்தசங்கரி | ஈ.பி.ஆர்.எல்.எப் | ஈ.பி.டி.பி | ஈரஅனல் | நெருப்பு | புளொட் | தூ | டெலோ நியூஸ் | இலங்கைநெற் | மீன்மகள் | சூத்திரம் | மகாவலி | உண்மைகள் | கவிமலர் | திருத்தியம் | அலை | பூந்தளிர் | எங்கள்தேசம் | சலசலப்பு | நோயல்நடேசன் | வளர்பிறை | எங்கள்பூமி | தமிழ்யுகே | புயல் | புளொட்யுகே | யாழ்முஸ்லீம் | புண்ணியாமீன் | யவ்னா ருடே | எஸ்.ஆர்.லெம்பட் | பஹீர் | தமிழ்யூஎன் | கவசங்களைதல் | தூங்காத கண்கள் | யாழ்மண் | தமிழ்குரல் | துருவம் | தினசரி | இலங்கை முஸ்லீம் | ஆயுள் | சமத்துவம் | ARRR | Asientribune | The lka academic | Tamil Week | The Hindu | Daily News | Sunday Times | Daily Mirror | The island | The Sunday Leader | ColomboPage | Sunday Times | CNN | BBC | Newsnow

# புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (43)

## 43. பழமை காத்த மண்ணிலிருந்து புலிகளின் வதை முகாமுக்கு வந்த புதுமையான உறவினர்கள்!



நான் முதன் முதலில் அந்தச் வதை முகாமுக்கு சென்ற போது, எனது உறவினர் ஒருவர் ஏற்கெனவே அங்கு இருப்பதை அவதானித்திருந்தேன். இடைக்காட்டைச் சேர்ந்த அவர் என்னை அங்கு கண்டதும் ஒரு பக்கம் கலவரமும், இன்னொரு பக்கம் மகிழ்ச்சியுமாக என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். கலவரத்துக்குக் காரணம் என்ன குற்றச்சாட்டில் வந்திருக்கிறேன் என்பதும், இயல்லாகவே பலவீனமும் மென்மைத் தன்மையும் உள்ள நான் புலிகளின் சித்திரவதைகளைத் தாங்கிக் கொள்வேனோ என்ற அச்சமுமாகும். மகிழ்ச்சிக்குக் காரணம் தனக்கு 'உதவியாக' உறவினர் ஒருவர் வந்திருக்கிறார் என்ற காரணமும் ஆகும்.

அவர் என்னுடன் கதைக்க விரும்புகிறார் என அவரது முகபாவனையிலிருந்து தெரிந்து கொண்டேன். ஆனால் உடனும் கதைப்பதைத் தவிர்த்தேன். இருப்பினும் அவர் அடிக்கடி என்னைச் சுற்றியே சுற்றியே வந்து கொண்டிருந்தார். இறுதியில் ஒருநாள் வலிய வந்து கதைத்தேவிட்டார். பொதுவாக புதிதாக வந்தவருடன் அங்குள்ள பழையவர்கள் இலேசில் கதைக்கமாட்டார்கள். அதையும் மீறி அவர் கதைத்ததால், நானும் கதைக்க வேண்டியதாய் போய்விட்டது. ஆனாலும் அவர் என்ன காரணத்துக்காக நான் கைதுசெய்யப்பட்டேன் என்பதைக் கேட்கவில்லை. நானும் அவரது கைதுக்கான காரணத்தைக் கேட்கவில்லை.

ஆனால் அவரால் தொடர்ந்தும் பொறுமையாக இருக்க முடியவில்லைப் போலும். தான் கைதுசெய்யப்பட்டதற்கான காரணத்தை மிகவும் இரகசியமாக மற்றவர்கள் சந்தேகம் கொள்ளாத வகையில் என்னிடம் தெரிவித்துவிட்டார். அவர் குறிப்பிட்ட காரணத்தை நான் முன்னர் லேசாக அறிந்திருந்த போதும், அதன் பூரண தாற்பரியத்தையும் விடயத்தின் பாரதூரத் தன்மையையும் அப்பொழுதுதான பூரணமாக உணர முடிந்தது.

நான் அவர் சொன்ன விடயத்தை அதுவரை பூரணமாக அறிந்து கொள்ளாததிற்கு ஒரு காரணம் இருந்தது. அந்த சம்பவம் நடந்த இடைக்காடு கிராமம்தான் எனது தாய் தந்தையரின் பிறப்பிடங்களாகும். அத்துடன் நான் சிறு வயதில் மூன்றாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் (Prep) வகுப்பு வரை கல்வி கற்றதும் இடைக்காடு இந்துக் கல்லூரியில் (இப்பொழுது மகாவித்தியாலயம்) தான். அதன் பின்னர் நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்குப் படிக்கச் சென்று, கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டு, 1965ம் ஆண்டுடன் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு விவசாயிகள் மத்தியில் கட்சி வேலை செய்வதற்காக கிளிநொச்சிக்குச் சென்ற பின்னர், இறுதியாக 1966ம் ஆண்டு ஜனவரி 4ந்திகதி இடைக்காட்டுக்குச் சென்றிருந்தேன். அதன் பின்னர் 20 வருடங்களாக நான் அங்கு செல்லவில்லை.

அதற்கொரு காரணம் இருந்தது. 1966ம் ஆண்டு முதல் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வட பகுதி முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களைத் தீவிரமாக முன்னெடுத்து வந்தது. அந்தப் போராட்டங்களில் இடைக்காட்டுக்கு அருகில் உள்ள அச்சுவேலி நகரில் நடந்த தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டமும், அங்குள்ள உலவிக்குளம் பிள்ளையார் கோவில் ஆலயப் பிரவோசப் போராட்டமும் உள்ளடங்கும். அவற்றில் நான் நேரடியாகப் பங்கெடுத்தேன். அதன் காரணமாக மிகுந்த உயர்சாதி மனோபாவமும், பழமைவாதமும் கொண்டிருந்த இடைக்காட்டைச் சேர்ந்த எனது உறவினர்கள் சிலரும், நண்பர்கள் சிலரும் என்மீது கடும் கோபத்தில் இருந்தனர். அவர்களுடன் நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் தைரியமும் விருப்பமும் இல்லாமையால,; நான் இடைக்காடு செல்வதைத் தவிர்த்தேன். என்னைச் சிறு வயதில் வளர்த்த எனது பெரிய தாயார் (அம்மாவின் மூத்த சகோதரி) தொய்வு நோயால் அவஸ்தைப்பட்ட போதுகூட என்னால் அங்கு சென்று அவரைப் பார்க்க முடியவில்லை. அவர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது மட்டும், இரு தடவைகள் அங்கு சென்று பார்த்து வந்தேன். பின்னர் அவர் 1989ல் காலமான போது மட்டும் இடைக்காடு சென்று, அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டுவிட்டு உடனடியாகத் திரும்பிவிட்டேன். அதன் பின்னரும் இன்றுவரை ஒரேயொரு தடவை மட்டுமே யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளா ஒருவருடன் தவிர்க்க முடியாத சூழலில் அங்கு சென்றுள்ளேன்.

நான் இதை இங்கு குறிப்பிடுவதன் நோக்கம், அன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கிராமங்களில் சாதி வெறி எப்படி தலைவிரித்தாடியது என்பதை விளக்குவதற்காகவே. (இன்று தமிழீழத்துக்கான 30 வருட ஆயுதப் போராட்டத்தின் பின்னரும்கூட, அங்கு சாதி வெறி என்பது நீறுபூத்த நெருப்பாகத்தான் - சில நேரங்களில் கொளுந்துவிட்டு எரிவதும் உண்டு - இருக்கின்றது)

இந்த நிலைமையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பின்னர், யாழ்ப்பாணத்தின் சாதித் தடிப்புமிக்க சில கிராமங்களில் ஒரு எதிர்பாராத மாற்றம் நிகழ்ந்தது. முன்பெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து உயர்சாதி வெறியர்கள் ‘நளவர் பள்ளரின் கட்சி’ என கிண்டலாகச் சொல்வது உண்டு. அந்த அடைமொழியையிட்டு எமது கட்சியினர் பகிரங்க மேடைகளில் பெருமையாக அதை ஏற்றுக் கொணடாடியதுமுண்டு. பின்னர் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த போது, அங்கு உருவான ஒவ்வொரு இயக்கத்துக்கும் முன்னால் யாப்பாணியத்தவர்கள் ஒவ்வொரு சாதிப் பெயரை அதேபாணியில் போட்டுக் கொண்டனர்.



இந்தத்தடவை அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சிக்கு முன்னால் முன்னர் போட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிப் பெயர்களை ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ இயக்கங்களுக்குச் சூடி அழகு பார்த்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றைய இயக்கங்களை விட சற்றுக் கூடுதலான அளவு ஏகாதிபத்திய எதிப்புத் தன்மையையும், சோசலிச அபிலாசைகளையும் கொண்டிருந்த காரணத்தால், அந்த இயக்கத்துக்கே இந்தச் சாதி அடைமொழிகள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டன. (ஒரு மாதத்துக்கு முன்னர் கூட நான் வதியும் புலம்பெயர் நாட்டில் உள்ள எனது உறவினர் ஒருவர், டக்ளஸ் தேவானந்தாவும் வரதராஜப்பெருமாளும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என, என்னுடன் விடாப்பிடியாக விவாதித்தார் என்றால், இந்த யாழ்ப்பாணியத்தின் தமிழீழ வருத்தம் என்னவிதமான அத்திவாரத்தில் நிலை கொண்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்)

ஆனால் ஒரு வரலாற்று முரணாக இந்த ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம், பெரும் சாதிமான்கள் வாழும் சில கிராமங்களில் அவர்கள் மத்தியிலிருந்த இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதைக் கண்டு நான் உண்மையில் வியந்து போனேன். குறிப்பாக உயர்சாதிமான்களுக்குப் பேர்போன சாவகச்சேரி (நுணாவில்), கரவெட்டி, காரைநகர் அத்துடன் இடைக்காடு போன்ற இடங்களில் ஆரம்ப காலங்களில் மற்நெந்த இயக்கங்களையும் விட, ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் மிகவும் செல்வாக்குடன் திகழ்ந்ததை எண்ணி நான் வியந்தது மட்டுமின்றி, அதற்கான காரணங்கள் என்னவென்பது ஆராயப்படவும் வேண்டுமென எண்ணுகின்றேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாக எனக்குத் தெரியும். இடைக்காட்டிலும் சாவகச்சேரியிலும் முற்போக்கு அரசியலை கொண்டு சென்று விதைத்தவர்கள், யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற சில மாணவர்கள் என்பதை பெருமையுடன் சொல்ல முடியும்.

யாழ்.பல்கலைக்கழகம் பிற்காலத்தில் ‘கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட’ கதையாக, புலிகளால் மாற்றப்பட்டாலும், மார்க்சிய சிந்தனையாளராக இருந்த பேராசிரியர் க.கைலாசபதி (பேராசிரியர் இடைக்காட்டுத் தொடர்பைக் கொண்டவர் என்பதுடன், அவரது மனைவி சர்வமங்களம் இடைக்காட்டைச் சேர்ந்தவரும், வவுனியா அரசாங்க அதிபராக இருந்தவரும், பிற்காலத்தில் ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனத்தில் பல நாடுகளில் பணி புரிந்தவருமான மாணிக்க இடைக்காடரின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது)) அதன் முதலாவது தலைவராக இருந்தமையும், அவருடன் ஒரு முற்போக்கு விரிவுரையாளர் குழாம் பணியாற்றியதும் தான், அங்கு அந்தக் காலத்தில் கல்வி

www.padippakam.com

கற்ற மாணவர்கள் முற்போக்கு சிந்தனைப் பண்ணையின் பயிர்களாக வளரக் காரணமாகும்.

நான் சிறையில் சந்தித்த அந்த இடைக்காட்டைச் சேர்ந்த உறவினர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்த போது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டானது. நான் 20 வருடங்களுக்கு மேலாக என்ன காரணத்துக்காப் போகாமல் தவிர்த்தேனோ, அந்த இடைக்காட்டிலிருந்து ஒருவர் புலிகளின் சிறைக்கு வந்திருக்கிறார் என்றால், அது அவரது வாழ்க்கை ஏதோ ஒருவகையில் மக்களின் பிரதான எதிரிக்கு எதிராக இருந்திருக்கின்றது என்ற பெருமைக்குரிய அங்கீகாரமாகும். அதுமட்டுமின்றி, அதே ஊரைச்சேர்ந்தவர்களும் அவரது உறவினர்களுமான இரண்டு புலி ஆதரவாளர்களைக் கொலை செய்த குற்றச்சாட்டிலேயே அவரும் அவருடன் இன்னொரு உறவினரும் (அவரது உறவினர் பக்கத்து அறையில் அடைக்கப்பட்டிருந்தார்) கைதுசெய்யப்பட்டு இங்கு அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்ட பொழுது, புலிகளின் செயற்பட்டால் உறவினர்களே தங்களுக்குள் மோதிக்கொள்ளும் அவலத்தை எண்ணிக் கவலைப்பட்டாலும், அந்த மண்ணில் நான் எதிர்பாராமல் உருவான வீரத்தை எண்ணி வியந்து போனேன்.

தொடரும்

முன்னைய பதிவுகள்